C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 16 MARCH 2024 ஆகாரம் : 03

இயேசு வந்து நடுவே நின்று:

## உங்களுக்கு சமாதானம்

என்றார்

யோவான் 20:19

Jesus Came And Stood Among Them And Said,

## *"Peace Be With You!"*

JOHN 20:19

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| WED<br>7.30 PM | BIBLE STUDY & PRAYER<br>PARSONAGE<br>CONTACT: THE PRESBYTER - 0567668348 |
| 1ST SAT<br>9.15PM | EVERY FIRST SATURDAY,<br>CBS TEACHERS MEETING,<br>CHURCH HALL,<br>MRS. DIVYA SHERIN- 0563973466. |
| 3RD FRI<br>7.00 PM<br>8.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS.SAGENA LIVINGSTON - 0553896871 |
| 4TH FRI<br>7.00 PM<br>8.00 PM | 4 TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR.STEPHEN CHELLARAJ - 0569906933 |
| FRI<br>29-2024 | GOOD FRIDAY<br>CONTACT: THE PRESBYTER<br>CHURCH MAIN HALL |
| SUN<br>31-2024 | EASTER SERVICE<br>CONTACT: THE PRESBYTER<br>CHURCH MAIN HALL |



# FROM THE PASTOR'S DESK

**அன்பிற்கினியவர்களே ஆண்டவரே இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

### முன்னுரை:

என் பின்னே வாருங்கள். (மத்தேயு 4:19) இதனை "பரிசுத்த கர்த்தராகிய என்னைப் போலாகுங்கள்" (Be like me) என்பதே என்று, இங்கிலாந்தில் (1859—1947) பிறந்த மிகச்சிறந்த ஆண்டவரின் ஊழியரான சிமித் விக்கிள்ஸ்வொர்த் அவர்கள் கூறுகின்றார்.

இவர் திருமறையின் மீது ஆழ்ந்த பற்றுக்கொண்டவர், ஜெபத்திலே உறுதியாக தரித்திருந்தவர். ஸ்மித் அவர்கள் படிக்காதவர் ஆனால் கர்த்தருக்கு என்று வைராக்கியமாக ஊழியம் செய்தவர்.இவரது ஊழியத்தில் மரித்தவர்களும் உயிர்பெற்றிருக்கிறார்கள்.

இவரின் இரண்டு அடித்தளங்கள் திருமறையும் ஜெபமும். நாமும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவை பற்றிக்கொண்டு வாழ அர்ப்பணிப்போம்.

இயேசுவின் "உயிர்த்தெழுதல் அவரின் அற்புதங்களின் மகுடம்"

### யாரைத் தேடுகிறீர்கள்:

அன்று காலியான கல்லறை அருகே தூதன் பெண்களின் மனதை அறிந்து, நீங்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை தேடுகிறீர்கள் என்றார். (மத்தேயு 28:5) இன்று ஒவ்வொருவரிடமும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து கேட்கின்ற கேள்வி, கடவுளா— உலகமா? யாரை தேடுகிறீர்கள்? என்பதுவே.எனவே, முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்று (மத்தேயு 6:33) அழைக்கிறார். ஆண்டவர் இயேசுவின் வழியை தேடவும், அவரின் பாதச் சுவடுகளை பின்பற்றி வாழவும் அழைக்கிறார்.

### வந்து பாருங்கள்:

அன்று கல்லறைக்குச் சென்ற பெண்களைப் பார்த்து ஆண்டவர் இயேசுவை வைத்த இடத்தை வந்து பாருங்கள் என்றும்,அவர் சொன்னபடி உயிர்த்தெழுந்தார் என்றும் தூதன் கூறினார். இன்றைக்கும் ஆண்டவர் இயேசுவின் வல்லமையை வந்து பாருங்கள் என்று நம்மை அழைக்கிறார். நம் பாவங்களை ஏற்று மரித்து உயிர்த்தெழுந்த இரட்சகர் இயேசுவின் வல்ல செயல்களை வாழ்வில் அனுபவிக்க வந்து பாருங்கள் என்று நம்மை அழைக்கிறார்.

**சீக்கிரமாய் போய் அறிவியுங்கள்:**

பாவத்தையும் சாபத்தையும் வென்று, மரணத்தை வெற்றி சிறந்த இயேசு இரட்சகரிடம் வாருங்கள், வல்லமையான ஆண்டவரின் உயிர்த்தெழுதலை வந்து பாருங்கள். சீக்கிரமாய் போய் அனைவருக்கும் அறிவியுங்கள் (மத்தேயு 28:7) என்று அன்றைக்கும், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நற்செய்தியை உலகத்தின் முடிவு பரியந்தம் சென்று அறிவியுங்கள் என்று இன்றைக்கும் (மத்தேயு 28: 20) கட்டளை கொடுக்கிறார்.

**நிறைவாக**

ரோமப்பேரரசின் உதவியுடன், யூத சமய குருக்கள் ஆண்டவர் இயேசுவை சிலுவையில் அறைந்தனர். ஆனால் ஆண்டவர் இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உலகெங்கும் அடிமை முறை ஒழிந்திடவும், ஆண்– பெண் சமத்துவம் உண்டாகவும்,சமூகத்தின் பல்வேறு இருள் அகன்று ஒளிர்ந்திடவும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அடித்தளம் பெற்றுள்ளது என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மெய்க் கிறிஸ்தவர்களாக உலகிலே ஒளியாக,பூமிக்கு உப்பாக அவர் தம் சான்றுகளாக ஆண்டவரின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி வாழ்ந்து காண்பிப்போம்.ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

## அனைவருக்கும் ஈஸ்டர் நல் வாழ்த்துக்கள்

இறைப்பணியில்,ஆயர்.

## Rev. S.Baktha Thiyagarajan




# சங்கிலிகள் நெருப்பை சிறை பிடிக்குமோ?

- செய்யாத தவறுக்கு செய்துவிட்ட நன்மைக்கு செதுக்கி வைத்த பரிசாமோ!
- உன் தோளில் சாய்வதற்கா வேரறுத்து நான் விழுந்தேன் என்றேதான் சிலுவையான மரம் கூட அழுததாம்!
- இரத்தம் அலம்புதே சித்தம் கலங்குதே அந்திப் பௌர்ணமியே உன்னை அடித்தே சிவக்க வைத்தார்களே!முள்ளில் விழுந்த இலையாய் முழுவதும் கிழிந்த மகனை, கல்லில் எழுந்த சிலை போல் நின்று கண்ணீர் வடித்தாள் தாய்மரி!
- அந்தக் காற்று எருசலேம் அப்பால் நின்று அழுது கொண்டிருந்தது! கருத்த மேகங்கள் நேராக மண்ணுக்கு வராமல் கல்வாரியில் கால் பதித்த மங்கையர்களின் கண்களில் பெரு மழையாய் பெய்தது!
- முள்ளுக்கும் வலித்திருக்கும் உன் தலையில் கிரீடமாய் சூட்டிய போது!
- இரும்பும் உருகியிருக்கும் உம் கை கால்களை துளையிட்டபோது!
- சாட்டையும் அலறி இருக்கும் உம் உடலை கிழித்த போது!
- படைப்புகள் அனைத்தும் துடிதுடித்திருக்கும் நீர் பட்ட பாடுகளை பார்த்தபோது!
- ஏன் மனிதனுக்கு மட்டும் தெரியவில்லை நீர் பட்ட பாடுகள் அனைத்தும் எனக்காக,என் பாவத்திற்காக என்று!
- இரத்தமும் நீரும் சுத்தமாய் வடிந்தது முறையாய் இறப்பும் முடிந்தது!
- குடிலில் பயணம் குகையில் முடியும் என கயவர்கள் நினைக்க!

- வெளிச்சத்திற்கு வேலி போட்டதாக இருட்டு இறுமாப்புடன் இருந்தது!
- எவ்வளவு பெரிய இருட்டாக இருந்தாலும் கிழக்கு அதை கிழிக்காமல் விடாது!
- சங்கிலிகள் நெருப்பை சிறைபிடிக்குமோ கிளர்ந்து எழுந்தார் மூன்றாம் நாள் கிறிஸ்து!
- முக்காலமும் நம்முடன் இருக்க நம் பாவத்திற்காக மரித்த கிறிஸ்துவை

இறுகப்பற்றிக் கொள்வோம், அவர் வழி நடப்போம்!

நம்மை ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமேன்.




இறைப்பணியில்,

ஆயரம்மா

*Mrs . P . Velanganni*





# செயலர் மடல்

**கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். கடந்து பிப்ரவரி மாதம் முழுவதும் நம் எல்லோரையும் கண்மணி போல் பாதுகாத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

கடந்த மாதத்தில் நடைபெற்ற திருச்சபையின் சுற்றுலாவில் உற்சாகத்துடன் கலந்துகொண்டு கிறிஸ்துவின் சகோதரத்துவத்தை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது திருச்சபையின் மூலம் தவக்காலத்தில் SHARING AND CARING வாயிலாக முகாம்களில் (CAMP) உள்ள மக்களை சந்தித்து அவர்களுக்கு உணவுப் பொருட்கள் கொடுத்து உதவி செய்ய தீர்மானம் செய்துள்ளோம்.

அதற்காக திருச்சபை மக்கள் தங்களின் உதவிகளை செய்ய அதற்குரிய பொறுப்பாளர் திரு. ராஜேஷ் அன்பு அவர்களை தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**நமது சிந்தனைக்கு,**

நாம் 40 நாட்கள் உபவாசம் எடுக்கிறோம். இந்த தவக்காலத்தில் 40 என்ற எண் வேதாகமத்தில் மிக முக்கியமாக பயன்படுத்தப்படுகிறது. அதாவது,

1. ஆதியாகமம் 7:4 –ல், இன்னும் ஏழு நாள் சென்ற பின் 40 நாள் இரவும் பகலும் பூமியின் மேல் மழையை வருவிக்க பண்ணுவேன் என்றார் கர்த்தர்.

2. யாத்திராகமம் 24:18–ல், மோசே மேகத்தின் நடுவே பிரவேசித்து, மலையின் மேல் ஏறி இரவும் பகலும் 40 நாட்கள் மலையில் இருந்தார்.

3. எண்ணாகமம் 32:13—ல், கர்த்தர் இஸ்ரவேல் மக்களை வனாந்தரத்திலே 40 ஆண்டுகள் அலையப் பண்ணினார்.

4. எண்ணாகமம் 13:25—ல், மோசேயின் கட்டளையின்படி, கானானை உளவு பார்க்கச் சென்றவர்கள்கானான் தேசத்தை சுற்றிப் பார்த்து 40 நாட்கள் சென்ற பின்பு திரும்பினார்கள்.

5. யோனா 3:4—ல், இன்னும் 40 நாட்கள் உண்டு அப்பொழுது நினைவு கவிழ்க்கப்பட்டுப் போகும் என்று யோனா கூறினார்.

6. மத்தேயு 4:1,2—ல், ஆண்டவர் இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு, ஆவியானவராலே வனாந்தரத்திற்கு கொண்டு போகப்பட்டு, இரவும் பகலும் 40 நாள் உபவாசம் இருந்தார்.

7. அப்போஸ்தலர் 1:3—ல், ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தப் பின்பு 40 நாள் அளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமானார்.

**அன்பானவர்களே, நாமும் இந்த 40 நாட்கள் தவக்காலத்தில் கர்த்தருக்கு முன்பாக நம்மை தாழ்த்தி, ஒப்புக்கொடுத்து ஜெபித்து, தேவையில் உள்ளோருக்கு உதவி செய்து நம்மையும் புதுப்பித்துக் கொள்வோம், ஆமென்.**


இறைப் பணியில்

Mr. C . Havin Heba

திருச்சபைச் செயலர்






# இயேசு சிலுவையில் தன்னையே பலியாக..

**தேவனுடைய பிரமாணம் எங்கெல்லாம் மீறப்படுகிறதோ அங்கெல்லாம் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் பட்டயம் நீட்டப்படுகிறது**

முதல் மனிதனும் தேவனுடைய கட்டளைய மீறி பாவம் செய்தபோது, ஏதேனிலே சுடரொளிப்பட்டயம் வைக்கப்பட்டு, மனுகுலமும் தேவ கோபாக்கினைக்கு என்று நியமிக்கப்பட்டது (ஆதியாக 3:24), அவ்விதம் ஒரு மனிதனுடைய மீறுதலினாலே, பாவமும், பாவத்தின் சம்பளமாகிய மரணமும் நம் எல்லோரையும் ஆண்டுகொண்டது (ரோமர் 5:17). எருசலேமுக்கு வந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்ட கர்த்தர், கர்த்தருடைய தூதன் நின்ற ஓர்னானின் களத்திலே பலிசெலுத்தும்படி தாவீதுக்கு கட்டளையிட்டார் (1நாளா 21:15,18).

**தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறுத்தப்பட பலி செலுத்த வேண்டும், இதுவே பிரமாணம்.**

தாவீது போய், ஓர்னானிடத்திலே அந்த களத்தை கேட்டார், இலவசமாக அல்ல, அதுபெறும் விலையை (அதற்குரிய சரியான விலையை) தருவேன் என்றார். 600 சேக்கல் பொன்னை நிலத்திற்குரிய பெறும் விலையாக கொடுத்து, நிலத்தை வாங்கி அங்கே கர்த்தருக்கு பலியிட்டார், வாதை நிறுத்தப்பட்டது (1நாளா 21:24–28).

**வாதை நிறுத்தப்பட விலை கொடுக்கப்பட வேண்டியதாக இருந்தது (1நாளா 21:22)**

பாவத்தினிமித்தம் நாமும் கோபாக்கினைக் கென்று நியமிக்கப்பட்டிருந்தோம், தேவனுடைய நியாயத்தீர்ப்பின் பட்டயம் நமக்கு விரோதமாக நீட்டப்பட்டதாக இருந்தது. ஆனால் எருசலேமுக்கு வந்த தீங்கை கண்டு மனஸ்தாபப்பட்ட கர்த்தர் (1நாளா 21:15) நமக்காகவும் மனமிறங்கினார். அன்றைக்கு கோபாக்கினை மாற்றப்பட பலிசெலுத்தும்படி எருசலேமிலே ஓர்னானின் களம் தெரிந்துகொள்ளப்பட்டது.

நமக்கோ கொல்கொதாவின் கொலைக்களம் தெரிந்து கொள்ளப்பட்டது.

அன்றைக்கு நிலத்திற்கு பெறும்விலை கொடுக்கப்பட்டது. நமக்கோ "மாபெரும் விலை" கொடுக்கப்பட்டது. அது 600 சேக்கல் பொன்னல்ல, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே!

"அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே"

(1 பேதுரு 1:18,19)

மாபெரும் விலையாக, நம்மை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனையே இயேசு கிறிஸ்து நமக்காக கொடுத்தார் (மாற் 10:45). இஸ்ரவேலிலே வாதை நிறுத்தப்பட விலைகொடுக்க வேண்டியதாயிருந்தது. நம்மேலிருந்த கோபாக்கினை மாற்றப்பட தேவகுமாரன் தன்னையே பதில் விலையாக கொடுத்தார்.

நாம் பெற்ற இரட்சிப்பு இலவசமானாலும் அதை நமக்கு சம்பாதித்து கொடுக்கும்படி மாபெரும் விலை சிலுவையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. நம்மை மீட்க தன்னையே பலியாக கொடுத்த கிறிஸ்து இயேசுவை நினைவுகூர்ந்து பிதாவாகிய தேவனை தொழுதுகொள்வோம்! ஆமென்.

ARTICLE BY

MR. ASHOK KUMAR

MEN'S FELLOWSHIP

# Sarah
# சாராள்



## (உன்னத பெண்மணி - NOBLE WOMEN)

"விசுவாசிகளின் தாய்" என்று அழைக்கப்படும் சாராள் ஆபிரகாமின் மனைவி. ஆதி 11:31ல் தேராகு, தான் இருந்த "ஊர்" என்கிற ஊரை விட்டு கானான் செல்ல பயணித்தான். ஊரிலிருந்து "ஆரான்" வந்த போது அங்கேயே இருந்து விட்டார்கள். அங்கு தான் கர்த்தர் ஆபிரகாமை சந்தித்து (ஆதி 12:1&5) கானானுக்கு போகும்படி கட்டளையிட்டார். கானான் செல்கிறார்கள், அங்கு பஞ்சம் உண்டானதால் அங்கிருந்து எகிப்து செல்கின்றனர் (ஆதி 12:10). பின்னர் எகிப்திலிருந்து ஆபிரகாமும் லோத்தும் கானான் புறப்பட்டனர். வரும் வழியிலே லோத்து, சோதோமிலே கூடாரம் போட்டான். ஆபிரகாம் மட்டும் தன்னுடைய அனைத்துச் செல்வங்க ளோடும் கானான் சென்று அங்கு குடியிருந்தான் (ஆதி 13:12). இப்படியான எல்லா பிரயாணங்களிலும் சாராய் தன் கணவனோடு இணைந்து பயணித்தாள்.இந்த சாராயின் வாழ்வில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய, நம் வாழ்விற்கு பயன் தரும் அநேக குணாதிசயங்கள் உண்டு. அவற்றில் கீழ்காணும் சில குணாதிசயங்கள் நம்முடைய வாழ்விற்கும் பிரயோஜனமாக இருக்கும் என எண்ணுகிறேன்.

### 1. கீழ்ப்படிதல்:

கீழ்ப்படிதல் என்பது சுலபமான காரியமல்ல. நமக்கு சாதகமான சூழ்நிலையாக இருக்கும் போது கூட கீழ்ப்படிதல் சில சமயங்களில் கடினமானதாகி விடுகிறது.

ஆதி 13:2 ல் ஆபிராம், எகிப்த்தை விட்டுப் புறப்படும் போது; வெள்ளி, பொன் போன்ற ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான் என்று பார்க்கிறோம். எனவே ஏராளமான பொருட்கள், வேலையாட்கள், கூடாரங்கள் என ஒரு மிகப்பெரிய கூட்டமே ஓரிடத்தை

விட்டு மற்றொரு இடத்திற்கு செல்ல வேண்டி இருந்திருக்கும். ஒரு வீட்டை காலி செய்து மற்றொரு வீட்டிற்கு செல்வது என்பதே கடினமான காரியம். ஆனால் இங்கோ, ஒரு பெரிய ஜனக்கூட்டமே ஒரு இடம் விட்டு இன்னொரு இடம் மாற வேண்டியிருந்தது. இது ஒரு மிகவும் கடினமான காரியம். மேலும் ஆபிராம் ஊர் என்ற இடத்தில் எல்லா வளங்களோடுமே காணப்பட்டார். பஞ்சம் அல்லது மேலும் மிகுந்த செல்வம் சேர்க்க வேண்டும் போன்ற சூழ்நிலைகள் இருந்திருந்தால் கூட இடம் மாற வேண்டிய அவசியம் தேவை எனலாம். ஆனால் இங்கு எல்லா வசதிகளும் இருந்தும், கர்த்தர் சொன்ன வார்த்தைக்காகவே ஆபிராம் சாராய் மனமுவந்து இணைந்து பிரயாணம் பண்ணினர். இங்கே முக்கியமாக இரண்டு இடங்களில் சாராயின் கீழ்ப்படிதலை நாம் காண முடிகிறது.

- கர்த்தர் ஆபிராமிடம் கூறிய வார்த்தைக்கு அவளும் கீழ்ப்படிந்து பிரயாணப்பட்டாள் (ஆதி 12:1).
- லோத்து செழிப்பான "கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்த்து தேசத்தைப் போலவும்" இருந்த பூமியை தனக்கென்று எடுத்துக் கொண்ட போது ஆபிராம் அதை லோத்துவுக் கென்று விட்டுக் கொடுத்தார். அந்த இடத்திலும் தன் கணவனுடைய முடிவிற்கு சாராய் கீழ்ப்படிந்தாள் (ஆதி 13:10)

## உ. கர்த்தரிடம் ஒப்புக்கொடுத்தல்:

ஆபிராம், சாராய் என்ற அவர்களுடைய பெயரை, தேவன் எப்பொழுது ஆபிரகாம் (ஆதி 17:5), சாராள் (ஆதி 17:15) என்று மாற்றினாரோ அதன் பின்பே அவர்கள் வாழ்க்கையில் முழுமையான அசீர்வாதத்தை பெற்றுக்கொண்டனர்.

- ஆபிரகாம் - திரளான ஜாதிகளின் தகப்பன்
- சாராள் - திரளான ஜாதிகளின் தாய்

இவ்வாறாக தங்களுடைய பெயரை மாற்றுவதற்கு தேவன் கூறியதும் கீழ்ப்படிந்தனர். அவ்வாறு சாராளும் ஒப்புக் கொடுத்ததால் தான் தேவன் திட்டமாய் ஆபிரகாமிடம் உன் மனைவி சாராள், ஈசாக்கை உனக்குப் பெறுவாள் என்கிறார் (ஆதி 17:19). ஒருவேளை சாராள் செவிகொடுக்காமல் சாராயாகவே இருந்திருந்தால் இத்தகைய பெரிய நன்மையை பெற்றிருக்க முடியுமா என்பது கேள்விக்குறியே. ஆதி 15:4 ல் உன்னுடைய கர்ப்பப் பிறப்பே

உனக்கு சுதந்தரவாளி என்று தேவன் கூறினார். இந்த வார்த்தையை தவறாகப் புரிந்த சாராய் தன்னால் இனி குழந்தை பெற முடியாது என்று எண்ணி தன் அடிமைப்பெண் ஆகாரை ஆபிராமுக்கு மறுமனையாட்டியாக்கினாள் (ஆதி 16:3). இதனால் பல குழப்பங்களும், பிரச்சனைகளும் உண்டானது. எப்பொழுது சாராய் தேவனுடைய மாற்றுதலுக்கு தன்னை முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்தாளோ அப்பொழுது தான் நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டாள்.

## 3. கண்ணோக்கமாயிருத்தல்

ஆதி 18:11ல், சாராள் வயது முதிர்ந்தவளாய் இருந்தாள் என்று பார்க்கிறோம். இந்த முதிர் வயதின் நாட்களிலும் வேகமாய், விவேகமாய் நடந்து கொண்டாள். உஷ்ணமான வேளையில் (ஆதி 18:1-2) மூன்று புருஷர் ஆபிரகாமின் கூடாரத்திற்கு வந்தனர். சாராளிடம் ஆபிரகாம் மூன்று படி (ஆதி 18:6)மெல்லிய மாவை எடுத்து பிசைந்து அப்பம் சுடு என்று கூறினார். வயோதிப காலம், நேரமோ கடும் வெயில் ஆனாலும் எந்த வித மறுப்பும் சொல்லாமல் நடந்து கொள்கிறாள். குணசாலியான ஸ்திரி "சோம்பலின் அப்பத்தை புசியாமல் தன் வீட்டுக்காரியம் எவ்வாறு நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள்" (நீதி 31:27) என்று வேதத்தில் வாசிக்கின்றோமே அவ்வாறே சாராளும் நடந்து கொள்கிறாள்.

கிறிஸ்துவுக்குள் அன்பான என் உடன் சகோதிரிகளே! நம்முடைய வாழ்விலும் நம் தேவனாகிய கர்த்தர், அவருடைய கட்டளைகட்கு நாம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார். அநேக வேளைகளில் அது கடினமாகக் காணப்பட்டாலும் சாராளைப் போல நம்மை கர்த்தரிடம் அர்ப்பணித்து, கீழ்ப்படிந்து நடக்கக் கற்றுக் கொள்வோம். நம்முடைய அனைத்துப் பணிகளிலும் கண்ணோக்கத்தோடு க்க வேண்டிய கிருபைகளை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்வோம். தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் இப்பேர்பட்ட கிருபைகளால் நிரப்பி வழி நடத்துவாராக.

ஆமென்

Article by

**MRS. HEPSI BAI NESAMONY**

WOMEN'S Fellowship



# யெப்தா (அவர் திறப்பார்)

**நியாயாதிபதிகள்.11:1—40**

"ஆகாதது என்று தள்ளின கல்லே மூலைக்கு தலைகல் ஆயிற்று"

## முகவுரை:

எப்தாவின் வாழ்க்கையை சற்று சிந்திப்போம். யெப்தா என்பதற்கு அவர் திறப்பார் என்று பொருள். யெப்தா ஒரு பலத்தை பராக்கிரமசாலி,அவர் இஸ்ரவேலில் ஒன்பதாவது நியாயாதிபதியாக தெரிந்து கொள்ளப்பட்டவர். கீலேயாத்தில் குடியிருந்தவர்,அவர் ஒரு பரஸ்திரீயின் மகன். விசுவாச வீரர்களின் பட்டியலில் யெப்தாவின் பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. (எபிரேயர் 11:32)

## நிராகரிப்பு:

யெப்தா ஒரு பரிஸ்தரீயின் மகன் என்பதால் தன் குடும்பத்தாராலும், தேசத்தாராலும் துரத்தி விடப்பட்டவர். (நியாயாதிபதிகள் 11:2) தன் குடும்பத்தில் அவருக்கு ஒரு பங்கும் இல்லை என்று துரத்தி விட்டார்கள்.அதற்காக சோர்ந்து போகவில்லை, யுத்தங்களை கற்றுக் கொண்டு போர் வீரராக திகழ்ந்தார்,கர்த்தர் அவரோடு இருந்தார்.

## உயர்வு:

சில நாட்களுக்குப் பின்பு யெப்தாவிற்கு தன் தேசத்தில் இருந்து அழைப்பு வருகிறது. அதாவது,அம்மோன் புத்திரர்கள் இஸ்ரவேலின் மேல் யுத்தம் பண்ணினார்கள். (நியாயாதிபதிகள் 11:4) கீலேயாத்தின் மூப்பர்கள் யெப்தாவை நோக்கி நீ வந்து அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ண எங்கள் சேனாதிபதியாக இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றனர். தன் தேசத்தில் இருந்து துரத்தப்பட்ட யெப்தா,இப்போது தலைவராக உயர்த்தப்படுகிறார். ஏனெனில் யெப்தாவைப்போல யுத்த வீரர் எவரும் இல்லை என்று அறிந்தார்கள். சூழ்நிலைகளால் தள்ளப்படும் எவரும் ஆண்டவரைப் பற்றிக் கொண்டிருந்தால் உயர்த்தப்படுவார்கள்.

## கர்த்தரிடம் வேண்டுபவர்:

அம்மோன் புத்திரர் இடத்தில் யுத்தத்திற்கு செல்வதற்கு முன்பு கர்த்தரிடத்தில் முறையிட்டார், தன் காரியங்கள் எல்லாவற்றையும் கர்த்தருடைய சன்னதியில் யெப்தா தெரிவித்தார். (நியா11:11)

## சமாதானத்தை நாடுகிறவர்:

பிரியமானவர்களே யெப்தா ஒரு தலைவராக நியமிக்கப்பட்ட உடனே, அம்மோன் புத்திரர்கள் மேல் படையெடுக்க பட்டயங்களுடன் புறப்படவில்லை.முதலில் விசாரித்தார்,பிறகு சேனாபதிகளை அனுப்பி உனக்கும் எனக்கும் என்ன வழக்கு இருக்கிறது என்று அம்மோன் அரசரிடம் உரையாடி சமாதானத்தை நாடுகிறார். (நியா11:12)

## பொருத்தனை நிறைவேற்றுதல்:

கடைசியாக யெப்தா கர்த்தரிடத்தில் ஒரு பொருத்தனை செய்கிறார். (நியா11:30) அந்த பொருத்தனை என்னவென்றால் அம்மோன் புத்திரரை கர்த்தர் என் கையில் ஒப்புக்கொடுத்தால் நான் சமாதானத்தோடு திரும்பி வரும்போது, என் வாசற்படியில் எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்குரியது.அதனை சர்வாங்க தகனபலியாக செலுத்துவேன் என்பதே. கர்த்தர் அம்மோன் புத்திரர்களை யெப்தாவின் கையில் ஒப்புக்கொடுத்தார், அது மட்டுமல்லாமல் இன்னும் 20 பட்டணங்களையும் தோற்கடிக்க ஆண்டவர் பெலன் கொடுத்தார். பிரியமானவர்களே, யெப்தா சிறிதும் நினைத்திருக்க மாட்டார், தன் ஒரே செல்ல மகள் அவனுக்கு முன்னே எதிர் கொண்டு வருவாள் என்று, அவர் உள்ளம் எவ்வளவு வேதனைக்குள்ளாய் இருக்கும்.

## கீழ்ப்படிதல்:

வெற்றி வாகை சூடிய மகிழ்வின் நேரமாக ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம் யெப்தாவிற்கு மிகப்பெரிய சோகம்.அது என்னவெனில் தன் ஒரே மகளை பலி கொடுக்கப் போகிறோம் என்பதே. யெப்தாவின் மகள் ஒரு வார்த்தையும் தந்தைக்கு எதிராக பேசவில்லை, அப்படியே கீழ்ப்படிந்தாள். உம்முடைய வாயிலிருந்து புறப்பட்ட படியே எனக்கு செய்யும் என்றாள். இந்த வாலிப பருவத்தில் நாம் கீழ்படிகிறோமா?நம் பெற்றோர்களுக்கு. கணவன்-மனைவிக்கு, மனைவி-கணவனுக்கு கீழ்ப்படிக்கிறோமா? என்று சிந்திப்போம்.யெப்தாவின் மகள் ஒரு வாலிப மகள் அவளுக்குள் எத்தனை கனவுகள் இருந்திருக்கலாம். ஆனாலும் அவள் கர்த்தருக்கும் தகப்பனாருக்கும் கீழ்ப்படிந்த மகளாக காணப்பட்டாள்.

## பொருத்தனை நிறைவேற்றுதல்:


கடைசியாக எப்ப கர்த்தருக்கு செய்த பொருத்தணியை நிறைவேற்றினார் நியாயாதிபதிகள் 11:39 பிரியமானவர்களே ஒரு பொருத்தனை செய்யும் முன் யோசித்து நிதானித்து பொருத்தனை செய்ய வேண்டும். செய்த பொறுத்த அணியை நிறைவேற்றாமல் போனால் அது சாபமாக பாவமாக மாறும். யுக்தா இஸ்ரவேல் மக்களை ஆறு வருடம் நியாயம் விசாரித்தார்.

## முடிவுரை:

பிரியமானவர்களே நாம் எங்கு எந்த சூழ்நிலையில் இருந்தாலும், நாம் எவரையும் இழிவாக எண்ணக்கூடாது. பொருத்தனை செய்வதில் மிக கவனமாக இருக்க வேண்டும். கீழ்ப்படிதல் இருக்க வேண்டும். சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும். ஆலோசனைகளை கேட்கிறவர்களாகவும், கர்த்தரிடம் விண்ணப்பிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

குறிப்பாக வாலிபப் பிள்ளைகளாகிய நாம் எந்த காரியத்தை செய்வதற்கு முன்னரும் தேவ சமூகத்தில் ஜெபிக்கின்றவர்களாக, ஆலோசனையை பெற்றுக் கொள்பவர்களாக இருக்க வேண்டும்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கரத்தில் அடங்கி இருக்கும் போது ஏற்றக் காலத்தில் கர்த்தர் நம்மையும் யெப்தாவைப் போல உயர்த்த வல்லவராய் இருக்கிறார். அவரைப் பற்றிக் கொண்டு வாழ்வோம் அவர் நம்மை ஆசீர்வதிப்பார், ஆமென்.




ARTICLE BY

MRS. NIRMALA JENIFER PAUL

YOUTH FELLOWSHIP

csitamilparishalain.org

# February Manna Winners

## FIND THE WAY

- JESSICA
- JOHANA JOSE
- JOHAN SANJO
- JANIA PRENI
- ELFINA

## KIDS COLOURING

- JESSICA
- JOHANA JOSE
- JANIA PRENI

## CROSS WORD

- ELFINA
- REGAN SHAN

## WORD SEARCH

- JESSICA
- JOHANA JOSE
- JOHAN SANJO
- JANIA PRENI
- ELFINA


ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

Email Subject: Your name / Quiz, type / Month - Year

To Church Email: csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.



# JOSHUA 1-12

## யோசுவா 1–12

MARCH '24 - QUESTIONS

1. கர்த்தருடைய தாசன் யார்?
2. சிவப்புக் கயிற்றை எங்கே கட்டச் சொன்னார்கள்?
3. யோர்தான் கரை புரண்டு போகும் காலம் எது?
4. யோர்தானில் இருந்து கரையேறி வாருங்கள் என யோசுவா யாருக்கு கட்டளையிட்டார்?
5. நீர் எங்களைச் சேர்ந்தவரோ என்று யோசுவா யாரிடம் கேட்டார்?
6. யாருடைய குடும்பம் எரிகோவில் தப்புவிக்கப்பட்டது?
7. உயிரோடு கற்களால் குவியலாக்கப்பட்டவன் யார்?
8. முழு கற்களால் பலிபீடம் கட்டப்பட்ட இடம் எங்கே?
9. உலர்ந்து பூசணம் பூத்திருக்கிறது என்று எதைச் சொன்னார்கள்?
10. உதவி செய்ய வந்து மாட்டிக்கொண்டது யார்?
11. எந்த ஏரியண்டையிலே ஏகமாய் பாளையமிறங்கினார்கள்?
12. இஸ்ரவேல் புத்திரரால் முறியடிக்கப்பட்ட ராஜாக்கள் எத்தனைப் பேர்?

QUIZ TIME?

### பிப்ரவரி- 2024-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. உபா 25:17,18 | 2. உபா 26:12 | 3. உபா 27:5,6 | 4. உபா 28:38,42 | 5. உபா 29:23
6. உபா 30:19 | 7. உபா 31:22 | 8. உபா 32:33 | 9. உபா 33:20 | 10. உபா 34:6

**திருமதி.பிப்ளின் நெல்சன், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரேனா ஜோஸ் செல்வகுமார், திருமதி.ஜெயின் அற்புதக்கனி.**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.


Your Name / Bible Quiz / MARCH'24 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

Name:

Date:

# Kids Coloring




## Find the Way

Name : ........................................

# Easter

Help the dove get to the cross



# WORD SEARCH

## The Resurrection



"Don't be alarmed," he said. "You are looking for Jesus the Nazarene, who was crucified. He has risen! He is not here. See the place where they laid him." Mark 16:6 (NIV)

The puzzle is based on Mark 16:1-8

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | Q | B | N | Q | U | A | S | I | D | N | A | O | H | C |
| Z | Z | Q | O | T | F | S | W | E | E | K | L | J | J | O |
| B | I | D | M | D | B | H | I | U | G | T | M | O | C | Z |
| V | U | U | X | A | Y | F | N | Y | J | E | S | U | S | T |
| K | V | M | L | K | I | V | W | D | F | N | I | Y | N | E |
| I | S | P | I | C | E | S | I | M | A | R | Y | I | S | F |
| K | O | F | U | U | J | A | W | E | C | Z | O | I | I | M |
| Y | Q | R | F | V | R | H | N | N | S | N | R | F | R | R |
| V | C | Y | A | F | Z | O | H | U | A | N | B | I | I | C |
| A | Q | R | A | B | T | U | I | S | U | A | M | R | T | I |
| A | H | G | I | S | N | R | Z | S | R | U | G | S | C | Y |
| T | Q | G | Y | S | G | H | O | F | Y | Z | N | T | P | F |
| B | O | T | T | J | E | T | D | R | O | L | L | E | D | M |
| P | E | M | V | B | O | N | L | A | V | T | L | A | J | R |
| L | W | N | B | E | D | N | Y | G | Y | B | O | T | J | K |

| | | | | |
|---|---|---|---|---|
| AFRAID | BODY | FIRST | DAY | CRUCIFIED |
| RISEN | MARY | TOMB | SPICES | ROLLED |
| SUNRISE | JESUS | WEEK | ANOINT | STONE |


**Name :** ..............................................................

# CROSS WORDS

Name : ..........................................................................

# *He is not here. He has risen.*

Words taken from John 20:1-18 (NIV)



ACROSS

2. To shed tears
4. The opposite of alive
8. A heavenly being
9. The thing that covered the entrance to Jesus'tomb
10. The color that is the opposite of black
12. A person who takes care of plants and flowers
14. The name of the woman who discovered Jesus' empty tomb

DOWN

1. The male parent
3. Return to an upright position after lying down; to return from the dead
5. The opposite of late
6. A period of seven days
7. An adult female person
11. A place where someone is buried; another name for grave
13. The opposite of light

# MARCH - 2024

| | |
|---|---|
| 01-MAR | Mr. David Livingston |
| 02-MAR | Mrs. Shaly Jesie |
| 02-MAR | Ms. T.P. Vamshi Juana |
| 03-MAR | Mrs. Yesubai |
| 03-MAR | Mrs. M. Subha Alvin |
| 03-MAR | Mr. G. Verslin Benny |
| 04-MAR | Baby. Samantha Baskar D/o Mr. Bhaskar Rajaram |
| 04-MAR | Mr. K.G. Libin Raj |
| 06-MAR | Mr. Derick Gasbath Joy |
| 06-MAR | Mr. Hebin Jose George |
| 06-MAR | Mr. Arul Raj |
| 12-MAR | Mr. J. Jolly Abraham |
| 13-MAR | Master. J. Joshua S/o Mr. Jose Selva Kumar |
| 14-MAR | Mrs. Radhika Grace Selva Kumar |
| 15-MAR | Mrs. Eben A. Prasad |
| 17-MAR | Mr. D.P. Joseph Jovin |
| 17-MAR | Mrs. R. Jackulin Milka |
| 19-MAR | Mr. A.S. Kannan |
| 19-MAR | Mr. John Prabakaran |
| 20-MAR | Mrs. Catherine Judith Franklin |

*Wish you many more happy returns of the day God bless you all*

# FEBRUARY - 2024

| | |
|---|---|
| 23-MAR | Ms. U.S. Gabrilin Shasmitha D/o Mr. Ujin Raj |
| 23-MAR | Mrs. Aji Kumari |
| 23-MAR | Mrs. Velanganni |
| 24-MAR | Master. Ruban S/o Mr. Selva Nayagam |
| 24-MAR | Mr. P. Lifin Raj |
| 25-MAR | Mrs. Rebecca |
| 25-MAR | Mrs. B. Swetha |
| 27-MAR | Master. Johan Sanjo S/o Mr. Belfer John Sigamony |
| 27-MAR | Master. Jeroan Stanly S/o Mr. Stanly. G |
| 30-MAR | Ms. Ajin Shah D/o Mr. Selvistor Solomon |
| 30-MAR | Mr. D.L. Derin S/o Mr. David Livingston. |
| 31-MAR | Ms. Annlin Sophia Nelson D/o Mr. Nelson Sopitha Raj. |
| 31-MAR | Mr. David Livingston |
| 31-MAR | Mrs. S. Steffi |

## MARCH *Wedding* ANNIVERSARY

**07-MAR** Mr. Ujin Raj
&
Mrs. Sangeetha



CHILDREN BIBLE SCHOOL

# KIDS HELPING KIDS

# RITHIKA

MAKE YOUR DONATION



# GOOD FRIDAY

He himself bore our sins in his body on the tree,
that we might die to sin and live to righteousness.
By his wounds you have been healed.

-1 Peter 2:24

## MARCH 29 2024













# MINISTRY LEADERS RETREAT MEET'24





**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**


**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**



# HE LIVES

## SPECIAL EASTER SUNDAY

April 31st
2024

Church Main Hall

Evangelical Church Campus
- Kanad hospital - Al ain